Cambridge International AS Level

**Cambridge Assessment International Education**
Cambridge International Advanced Subsidiary Level

**TAMIL LANGUAGE** **8689/22**

Paper 2 Reading and Writing **October/November 2019**

**1 hour 45 minutes**

INSERT

*2380215280-I*

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய கட்டுரைகள் இந்த இணைப்பில் உள்ளன.

இந்த இணைப்பில் உன் எண்ணங்களை எப்படி எழுத வேண்டும் என்று குறித்துக் கொள்ளலாம். இந்த இணைப்பைத் தேர்வு அதிகாரி **மதிப்பிட மாட்டார்**.

This document consists of **5** printed pages and **3** blank pages.


© UCLES 2019
Cambridge Assessment International Education

[Turn over

PapaCambridge

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு 1, 2, 3 **கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

### கலாச்சாரப் பேணுகை

கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களான பண்டைய கட்டிடங்கள், கதைகள், கூத்துகள், நாடகங்கள், நடனம், ஓவியம் போன்றவற்றை அவற்றின் சுய வடிவத்தில் முடிந்தவரை பாதுகாக்கும் எண்ணம் தற்போது பலர் மத்தியிலும் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ளது. இவற்றைக் காப்பதற்காக பல அரசுசார்ந்த நிறுவனங்கள் உதவி வருகின்றன. அத்துடன், சில தனியார் நிறுவனங்களும் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கலாசாரப் பேணுகை பற்றி இந்திய தொல்பொருள் ஆய்வாளரான ரவிக்குமார் கருத்துத் தெரிவிக்கும்போது, "கலாசாரப் பேணுகைக்கான மனநிலையைப் பின்வருமாறு விளக்கலாம். முதலாவதாக, நாம் கலாசாரப் பேணுகையின் முக்கியத்துவத்தை தனிநபராக நின்று புரிந்துகொள்ளல் வேண்டும். இரண்டாவதாக, அப்படித் தனிநபராக நின்று புரிந்துகொள்ளும்போது நமது கலாச்சாரத்தின் மீது நமக்கு இயல்பான மதிப்பு ஒன்று தோன்றும். மூன்றாவதாக, மேற்கூறிய செயற்பாடுகள் காரணமாக, எமது பண்டைய கலாச்சாரத்தைப் பேண வேண்டும் என்ற ஆர்வம் எம்முள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. நான்காவதாக, அத்தகைய பேணுகை பற்றிய உணர்வுடன் சேர்ந்து அதனை நாமும் ரசித்து மற்றவர்களையும் ரசிக்கச் செய்தல் வேண்டும் என்ற மனப்பாங்கு தோன்றும். இறுதியாக, மேல் குறிப்பிட்ட இந்தச் சுழல் வட்டச் செயற்பாடு பலரையும் அடையும்போது கலாசாரப் பேணுகையானது இலகுவானதாகின்றது" என்று கூறினார்.

பரம்பரையாகப் போற்றப்பட்டு வரும் கலாசார அம்சங்கள் அனைத்தும் காலப் போக்கில் சிறிய அல்லது அதிகமான மாற்றங்களுக்குள் உட்படும். உதாரணமாக, உலகில் உள்ள இதிகாசங்கள் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரியதாகக் கருதப்படும் மகாபாரதம் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இருந்தே உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு 'ஜெய' என்கிற பெயரில் வழங்கி வருகின்றது. இது முன்னர் அரசவைகளில் கவிஞர்களால் சொற்செறிவுமிக்க பாடல்களாகப் பாடப்பட்டு வந்தது. அத்துடன், ஒவ்வொரு ஊரிலும் மக்கள் கூடும் இடங்களை அறிந்து அங்கு நாட்டுப்புறப் பாடகர்கள் பாரதக் கதையை எளிமையான மொழியில் விவரித்து நாட்டுப் பாடல்களாகப் பாடினார்கள். குறிப்பிட்ட காலத்தின் பின்னர், பிராமண வம்சத்தினரின் செல்வாக்கிற்குட்பட்டு மகாபாரதம் கோயில்களில் கதைப்படிப்பாக ஓதிப் பொருள் சொல்லப்பட்டது. இவ்வாறாக கால மாறுதல்களுக்குட்பட்டு நாட்டுப் பாடல் கதையாக இருந்த மகாபாரதக் கதையில் பல இடைச்செருகல்கள் ஏற்பட்டு அது இன்றைய இதிகாசமாக உருவாகியது.

கிராமங்களை விட பெரு நகரங்களில் விறுவிறுப்பான வாழ்க்கை முறை காரணமாகவும் வேலைப்பளு காரணமாகவும் பாரம்பரியக் கலைகளின் பேணுகையானது பல்வேறு சிரமங்களுடன் மேற்கொள்ளப்படுகின்றது. மோகன் தனது ஊரான புதுச்சேரியில் பிரபலமான இசை நாடகமான அரிச்சந்திர மயான காண்டத்தை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் ஆண்டுதோறும் மேடையேற்றி வருகின்றார். அவருடன் கலந்துரையாடியபோது அவர், "பல்வேறுபட்ட வேலைப்பளு இருந்த போதிலும்,

© UCLES 2019

PapaCambridge

சங்கரதாஸ் சுவாமிகள் கலாசார நிலையம் என்ற பெயரில் நாடகப் பள்ளி ஒன்றை நான் ஆரம்பித்துள்ளேன். நாடக வரலாற்றில் தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகளது பங்களிப்பு மிகப் பெரியது. சங்கரதாஸ் சுவாமிகளது நினைவு நாள் அன்று சமய நிகழ்வுகளுடன் கூடிய விழா ஒன்றை நான் ஒழுங்கு செய்வது வழக்கம். நான் சங்கரதாஸ் சுவாமிகளது மாணவப் பரம்பரையுள் ஒருவன் என்ற ரீதியில் அவரது சில இசை நாடகங்களை இளம் கலைஞர்களைக் கொண்டு ஆண்டுதோறும் மேடையேற்றி வருகின்றேன். அதில் சிறப்பாக நடிப்பவருக்கு கேடயமும் புலமைப் பரிசிலாகச் சிறுதொகை பணமும் கொடுப்பது எனது வழக்கம். நகரங்களில் சினிமா மிகுந்த ஆதரவைப் பெற கிராமிய நாடகங்கள் குறைந்த ஆதரவைப் பெறுகின்றன" என்று கூறினார்.

© UCLES 2019


PapaCambridge

பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்து விட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

**நாட்டார் கூத்துகள்**

தமிழில் அரிதாகிவரும் ஒரு முக்கியமான கலை வடிவம் நாட்டார் கூத்துகளாகும். மனித இனம் தோன்றிய நாள் முதலாக நடனக் கலையும் நாடகக் கலையும் மக்கள் மத்தியில் இருந்துள்ளன. இது பின்னர் நாட்டுப்புற மக்களைச் சென்றடைந்தபோது இசையுடன் கலந்து நாட்டுப்புறக் கூத்துகளாகப் பரிணமித்தன. இந் நாட்டுப்புறக் கூத்துகள் தமக்கேயுரிய அமைப்பும், நேர்த்தியும், கட்டுக்கோப்பும் கொண்டவை.

நாட்டார் கூத்துகள் பல அரிய கலைகளாகத் தொலைக்காட்சியிலும் சமூக ஊடகங்களிலும் மட்டும் காட்டப்படுகின்ற நிலை மனவருத்தத்தைத் தருகின்றது. அத்துடன் பல்கலைக்கழகங்களில் இக் கலை குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை வெறுமனே ஆய்வு மேற்கொண்டு பட்டப்படிப்பை நிறைவு செய்யும் நோக்குடனேயே பல மாணவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நிலை மாறி, இக்கலைகள் அவற்றின் இயல்புத் தன்மை குறையாது, அவை நிகழ்த்தப்படுகின்ற கிராமங்களிலேயே நிகழ்த்தப்படல் வேண்டும். மேலும், இவை கிராமப்புறக் கலைஞர்களால் பாதுகாக்கப்படுவதற்கான ஊக்கமும் உதவிகளும் பொதுமக்களாலும் அரசாலும் வழங்கப்படுதல் வேண்டும்.

பல ஆண்டுகளாக நாட்டார் கூத்துகள் பலவற்றிற்கு ஆசிரியராக இருந்த பெருமாள் கருத்துத் தெரிவிக்கும்போது, 'தற்போதெல்லாம் கூத்துகளைப் பார்க்க வருபவர்களது எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. பார்வையாளர்களின் எண்ணிக்கையை வைத்துத்தான் நிகழ்ச்சி சிறப்பாக அமையும் என்ற தன்மை கூத்துகளுக்குக் கிடையாது. கூத்துகள் பெரும்பாலும் ஏதேனும் கோயில் சார்ந்த சடங்காக நிகழ்வதால் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் கிராம மக்கள் முன் இலவசமாகவே நடத்தப்படுகின்றன. இறைவனே பிரதான பார்வையாளன் ஆகின்றான். இதனால், சமயம் சார்ந்ததாக இக் கூத்துகள் விளங்குகின்றன' என்று பெருமாள் விளக்கினார்.

தெருக்களிலும் பூங்காக்களிலும் கூத்துகளை நடாத்தி பொதுமக்களுக்கு அது தொடர்பான ஆர்வத்தை மேம்படுத்தி வரும் நிறுவனம் கலைக்கழகமாகும். இதன் நிர்வாகியான அழகப்பன் தனது கூத்து பற்றிய ஈடுபாட்டை விவரிக்கும்போது, 'எங்கள் வீட்டுக்கு எதிரே ஒரு மடம் இருந்தது. அதில் இராமலிங்கப்பிள்ளை என்ற தமிழறிஞர் ஒருவர் இருந்தார். எனக்கு எட்டு வயதாக இருக்கும்போது அந்த மடத்தில் அமர்ந்து எனது பாடசாலைப் பாடங்களை படிப்பது வழக்கம். அப்போது மடத்தின் தலைவரைப் பார்க்கவென பலர் வருவார்கள். அவர்கள் கூறும் தகவல்களையும் பாடிய பாடல்களையும் கவனமாகக் கேட்பேன். மிக எளிமையான சொல்நடையில் அமைந்திருக்கும் அந்தப் பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்துப் போயின. நேரம் கிடைப்பதற்குத் தக்கவாறு நாட்டார் பாடகர் பாடலைக் கூட்டியோ குறைத்தோ பாடுவார்கள். அவற்றிற்கு பாடகர் ஆலாபனைகளை மனம் போன வகையில் சேர்ப்பார். இவ்வாறு பாடும்போது இசையின் இனிமை கூடி கேட்பவருக்கு இன்பம் தரும். இதுவே பிற்பட்ட காலத்தில் நான் நாட்டார் கூத்துகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதலுக்குக் காரணமாக இருந்தது' என்று கூறினார்.

© UCLES 2019 

கிராமப்புற மக்கள் வறுமையில் வாடிய காரணத்தால் கூத்துகளை நிகழ்த்துவதற்குரிய நிதி வசதி இல்லாமல் இருந்தது. இளம் சந்ததியினர் நவீன சினிமாப் பாடல்களில் அதிக கவனம் செலுத்துகின்றமையால் பாரம்பரியக் கலைகளில் அசிரத்தை அடைகின்றனர். வீட்டுக்குள்ளேயே வானொலி, சினிமா, தொலைக்காட்சி என்பனவற்றின் தாக்கம் அதிகமாக உள்ளதால் கூத்துக்கள் வளரவில்லை. எனினும், மரபுக் கலையுடன் புதிய உத்தி முறைகளையும் இணைத்து கூத்துகளைப் பாடசாலை மட்டத்தில் மேடையேற்றுவதில் மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். அத்துடன், ஒரே கதையைப் பகுதி பகுதியாகப் பிரித்து பல நாட்கள் ஆடப்பட்டு வந்த கூத்துகள் தற்போது குறுகிய காலப்பகுதிக்குள் நிகழ்த்தப்படுகின்றன. மேலும், கூத்துகளில் பெண்கள் பங்கு பற்றுவது மரபன்று. இதற்கு மாறாக சில கூத்துகளில் பெண் வேடங்களைப் பெண்களே ஏற்று நடத்தி வருகின்றமை பெரியதொரு மரபு மாற்றமாக இருக்கின்றது. வாய்மொழியாகப் பரம்பரை பரம்பரையாகப் பயிலப்பட்டு வந்த கூத்துகள் பல தற்போது எழுத்து வடிவம் பெறத்தொடங்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

© UCLES 2019 

PapaCambridge

BLANK PAGE

© UCLES 2019


PapaCambridge

**BLANK PAGE**

© UCLES 2019



PapaCambridge

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.



PapaCambridge